



தமிழ்நாடு அரசு

## வேளாண்மைப் பொறியியல் துறை

# விவசாயிகளுக்கு சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டம்

விவசாயிகள் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினை குறைத்து, சூரிய சக்தியைப் பயன்படுத்தி சுகாதாரமான முறையில் மாசுபடாமல், விரைவாக உலரவைத்து தரத்தினை உறுதி செய்து, விளைபொருட்களின் இருப்பு காலத்தை அதிகரித்து, மதிப்பு கூட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபம் ஈட்டிட ஏதுவாக, பாலிகார்பனேட் தகடுகள் வேய்ந்த பசுமை குடில் வகையிலான சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகளுக்கு மானியத்துடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அமைத்துத் தரப்படுகிறது.



**சூரிய கூடார உலர்த்தி**

- சூரிய கூடார உலர்த்தியில் வேளாண் விளை பொருட்களை உலர வைப்பதன் மூலம் விளை பொருட்களை உலர்த்துவதற்கான கால அளவு, கூலியாட்கள் செலவு, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு ஆகியவை குறைகிறது.
- விளைபொருட்கள் சுகாதாரமான முறையில் இயற்கை தன்மை மாறாமல் உலர்வதால் அவற்றின் தரம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பூஞ்சைக்காளான் படிவதும் தவிர்க்கப்படுகிறது.
- சூரிய கூடார உலர்த்தியில் கொப்பரை தேங்காய் பூஞ்சை தொற்றின்றி உலர்வதால், உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சல்பர் போன்ற வேதிப் பொருட்களை பயன்படுத்த அவசியமில்லை.





**வேளாண் விளைபொருட்களை சூரிய கூடார உலர்த்தியில் உலர வைத்தல்**

**வேளாண் விளை பொருட்களான,**

- கொப்பரை தேங்காய், நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள்
- வாழைப்பழம், நெல்லிக்கனி உள்ளிட்ட பழவகைகள்
- கிராம்பு, இஞ்சி உள்ளிட்ட வாசனைப் பொருட்கள்
- முருங்கை இலை, கருவேப்பிலை, மூலிகை செடி இலைகள், பாக்கு, தேயிலை, காப்பிக் கொட்டை ஆகியவற்றை சுகாதாரமான முறையில் உலர்த்தி, மதிப்புக் கூட்டி அதிக விலைக்கு விற்பனை செய்து விவசாயிகள் அதிக இலாபம் பெற இயலும்.
- விவசாயிகளின் தேவைக்கேற்பவும், இடவசதிக்கேற்பவும் சூரிய கூடார உலர்த்திகள் 400 முதல் 1000 சதுர அடி பரப்பளவு வரை அமைத்து தரப்படுகிறது.
- வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து விவசாயிகள் தங்களுக்கான நிறுவனத்தினை தேர்வு செய்து கொள்ளலாம்.

**சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட விலை விவரம்**

| வ. எண். | பரப்பு (சதுர அடி) | விலை ஒருசதுர அடிக்கு (ரூ.) | மொத்த விலை (ரூ.) | 40 % மானியம் (ரூ.) | விவசாயிகளின் பங்களிப்பு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | 400 | 765 | 3,06,000 | 1,22,400 | 1,83,600 |
| 2. | 601 | 739 | 4,44,139 | 1,77,655 | 2,66,484 |
| 3 | 801 | 714 | 5,71,914 | 2,28,765 | 3,43,149 |
| 4. | 1,000 | 714 | 7,14,000 | 2,85,600 | 4,28,400 |

**குறிப்பு**

1) சூரிய கூடார உலர்த்திகளில் பயன்படுத்த தேவைப்படும் ட்ரேஸ் (Trays) மற்றும் ட்ராலிஸ் (Trolleys) விவசாயிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், 400–600 சதுர அடி வரையிலான பரப்பிற்கு ரூ.1,56,326/–ம், 601–800 சதுர அடி வரையிலான பரப்பிற்கு ரூ.2,34,490/–ம், 801–1000

சதுர அடி வரையிலான பரப்பிற்கு ரூ.3,12,653/—ம், கூடுதலாக செலுத்தினால் அதற்கேற்ப மானியம் வழங்கப்படும்.

2) நிர்ணயிக்கப்பட்ட விலையானது வடிவமைப்பு, விநியோகம், சிவில் கட்டமைப்பு மற்றும் ஜிஎஸ்டி ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த விலையாகும்.

**அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்**

| வ.எண். | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | தொலைபேசி எண் |
|---|---|---|
| 1. | பாரத் பவர் என்ஜினீயர், சேலம் | 7373705842 |
| 2. | ரிச் பைட்டோ கேர், சென்னை | 9840074599<br>8248647648 |
| 3. | ஏடிஆர் சோலார், மதுரை | 9344453444 |
| 4. | போகசன் எனர்ஜி சிஸ்டம்ஸ், கோயம்புத்தூர் | 9842291069 |
| 5. | ஆதி சோலார், கோயம்புத்தூர் | 9360455155 |
| 6. | ஜெயசொர்ணா அக்ரோடெக், திண்டுக்கல் | 9443155883 |
| 7. | சுரேன் பவர், சென்னை | 9994169088 |

மேற்கண்ட நிறுவனங்களிலிருந்து விவசாயிகள் / விவசாயக் குழுக்கள் தாங்கள் விரும்பும் நிறுவனத்தினை தங்களின் முழு விருப்பத்தின் பேரில் தேர்வு செய்து கொள்ளலாம்.

**மானிய விவரம்**

சூரிய கூடார உலர்த்திகள் நிறுவும் செலவின் முழுத் தொகையை முன்பணமாக சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் பெயரில் செலுத்தி 40 சதவீதம் பின்னேற்பு மானியமாக பெற விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு கீழ்க்கண்ட மானியத்துடன் அமைத்துத் தரப்படுகிறது.

1) சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த விலையில் 40 சதவீதம் அல்லது ரூ.3.50 இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக சம்பந்தப்பட்ட விவசாயியின் வங்கி கணக்கில் வழங்கப்படுகிறது.
2) இதர விவசாயிகளுக்கு மொத்த விலையில் 40 சதவீதம் அல்லது ரூ.3.00 இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.
3) இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.
4) கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் உள்ள கிராம விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி அறிந்துகொள்ள மற்றும் விண்ணப்பிக்க கீழ்க்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://mis.aed.tn.gov.in

https://aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் (வே.பொ).<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண். 487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை – 600 035.<br>தொலைபேசி எண்: 044-29510822<br>இமெயில்– aedcewrm@gmail.com | சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே. பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே. பொ) |